THE EXAMINATION OF THE WITNESS

(Section 281 Code of Criminal Procedure)

IN THE JUDICIAL MAGISTRATE COURT, VALLIYOOR

| | | | |
|---|---|---|---|
| Calender | : | **CC.No.120/2019** | **PW.3** |
| Miscellaneous | : | | |
| Preliminary Register | : | | |

STATEMENT OF WITNESS

| | | |
|---|---|---|
| Name | : திரு.அற்புதராஜ் | |
| Father's Name | : திரு.தேவதாசன் | |
| Village | : கள்ளிகுளம் | |
| Taluk | : | |
| Employment | : வல்கனைசிங் ஓர்க் | |
| Age | : | Date:25.11.2024 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 on today.

**(Accused A3 present. A1 absent and petition U/s.317 Cr.P.C is filed and allowed, A2 absent and petition U/s.317 Cr.P.C is filed and allowed, A4 absent and petition U/s.317 Cr.P.C is filed and allowed.)**

<u>முதல் விசாரணை</u> :–

1. நான் கள்ளிகுளத்தில் குடியிருந்து வருகிறேன். நான் வல்கனைசிங் வேலை செய்து வருகிறேன். எங்கள் தெருவில் திருடு போனது சம்பந்தமாக போலீஸார் வந்து விசாரித்தார்கள். தேதி ஞாபகம் இல்லை. என்னிடமும் போலீஸார் கையொப்பம் பெற்றார்கள். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது இல்லை. இவ்வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை. **(நீதிமன்ற கேள்வி– யாராவது உங்களை மிரட்டினார்களா என்றால் என்னை யாரும் மிரட்டவில்லை. நானாகவே சாட்சியம் அளிக்கிறேன்.)**

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதி அளிக்கப்பட்டது.**

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>**

2. போலீசார் விசாரணையில் கடந்த 19.08.2016 ஆம் தேதி 16.00 மணிக்கு வழக்கின் சம்பவ இடத்தை போலீஸார் பார்வையிட்டு, சம்பவ இடத்திற்கு வந்த வள்ளியூர் போலீஸார் எங்கள் முன்னிலையில் வழக்கின் சம்பவ இடத்தையும் அதன் சுற்றுப்புறத்தையும் ஆய்வு செய்து பார்வை மகசர், மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள் என்றும், அதில் நானும், கென்னடி என்பவரும் கையொப்பம் செய்து கொடுத்தோம் என்றும் கூறிவிட்டு தற்போது எதிரிகளுக்கு வேண்டி உண்மையை மறைத்து அரசுக்கு எதிராக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

3. இல்லை.